**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | MC No. 24/2024 |
| Deposition of witness | | PW- 1 /LW- 1 |
| Name | | திருமதி. சிவபாரதி |
| Father’s/Husband Name | | திரு.அரவிந்த் |
| Village | | அணைக்காடு |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 27/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 6th day of May 2025**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனக்கு திருமணம் நிச்சயம் செய்தபோது எதிர்மனுதாரர் வீட்டில் இருந்து 2 பவுன் தங்க செயின் போட்டார்கள். திருமணத்தின்போது எனக்கு 5 1/2 பவுன் செயின், 1 பவுன் தாலியும் போட்டார்கள். திருமணச்செலவு நாங்களும், எதிர்மனுதாரரும் பாதி பாதி சேர்ந்து தான் செலவு செய்தோம். எங்கள் தரப்பில் இருந்து திருமணச்செலவிற்கு ரூ.1 லட்சத்து 35 ஆயிரம் செலவு செய்தோம். எதிர்மனுதாரர் ரூ. 5லட்சம் கடன் வாங்கி திருமணசெலவு செய்துள்ளார் என்று சொன்னால் எவ்வளவு கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. திருமணத்திற்கு பின் நானும் எதிர்மனுதாரரும் அவருடைய வீட்டில் தான் திருமண வாழ்க்கையை தொடங்கினோம். திருமணமாகி இரண்டு மாதங்கள் அவருடைய வீட்டில் இருந்தோம், பிறகு சென்னை சென்றுவிட்டோம். நான் சென்னை சென்ற பிறகு மருத்துவசிகிச்சை எடுத்தேனா என்றால் ஆமாம். இங்கிருக்கும் போதும் மருத்துவசிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். அதன் பிறகு நான் கர்பம் ஆனேன். அதன்பிறகு வளைகாப்பிற்காக நான் என் அம்மா வீட்டிற்கு வந்தேனா என்றால் சரியல்ல, எதிர்மனுதாரரின் வீட்டிற்கு தான் சென்றேன். எதிர்மனுதாரர் வீட்டில் சென்னையில்

இருந்து வந்ததில் இருந்து 4 மாதங்கள் இருந்தேன். வளைகாப்பிற்கு பிறகு என் பெற்றோர் வீட்டிற்கு 2022 ஆண்டு அக்டோபர் மாதம் சென்றேன். குழந்தை பிறந்த பிறகு 16 ம் நாள் சாமி கும்பிட பிரச்சனை செய்து எதிர்மனுதாரர் வீட்டிற்கு அழைத்து சென்றார்கள். சாமிகும்பிட வரும்போது ஏன் நகையை போட்டு வரவில்லை என்று பிரச்சனை செய்தார்களா என்றால் சரியல்ல, நகை வேண்டுமென்று தான் பிரச்சனை செய்தார்கள். அதன்பிறகு எதிர்மனுதாரர் தான் கட்டாயப்படுத்தி என் பெற்றோர் வீட்டிற்கு கொண்டுவிட்டார். அதன்பிறகு தற்போது வரை என் பெற்றோர் வீட்டில் தான் வசித்து வருகிறேன். நாங்கள் ஒன்றாக வாழ்ந்த போது எங்களுக்குள் அடிக்கடி சண்டை வருமா அல்லது மகிழ்ச்சியாக இருந்தோமா என்றால் எங்களுக்குள் தனிப்பட்ட முறையில் சண்டை இல்லை, என் மாமியார் மூலமாக தான் சண்டை வரும். என் கணவர் நல்லவர் தான். அவர்மேல் ஏன் போலிசில் புகார் கொடுத்து ஜெயிலில் வைக்க வேண்டுமென்று குற்ற நடவடிக்கை எடுத்துள்ளீர் என்றால் காவல் நிலையத்தில் சேர்ந்து வாழ்வாதாக சொல்லிவிட்டு பிறகு விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ததால் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அதன் பேரில் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு பதியப்பட்டது. நான் தற்போது சேர்ந்து வாழ விரும்புகிறேன். நாங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் ஒரு மனைவி கணவனுக்கு செய்யவேண்டிய கடமையை செய்யவில்லை நானாக தான் பிரிந்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அவருடைய வேலையையும் சம்பாத்தியத்தையும் நான் குறைவாக பேசி சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. நான் தான் ஆவேசமாக சண்டை போடுவேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பு எனது வீட்டில் நடந்த பிரச்சனை காரணமாக நான் தீ யிட்டு தற்கொலைச்செய்துக்கொள்ள முயற்சி செய்தேனா என்றால் சரியல்ல, திருவிழாவின் போது டீ வைக்கும் போது தவறுதலாக தீ காயம் பட்டதால் மீனாட்சி மருத்துவமனையில் 10 நாட்களாக சிகிச்சை பெற்றேன். எனது உடம்பில் தீ காயத்திற்கான தழும்பு ஏற்பட்டதா என்றால் ஆமாம், தற்போது இல்லை. தீ காயம் பற்றி திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் வீட்டில் சொல்லவில்லை என்றால் சரியல்ல, நான் மருத்துவமனையில் இருக்கும் போது என் மாமியார் வந்து என்னை பார்த்தார். எனக்கு போடப்பட்டதாக சொல்லப்படும் நகைகள் என் வசம் தான் உள்ளது என்றால் சரிதான். என் கணவருக்கு போட்ட நகைகள் அவரிடம் தான் உள்ளது.

திருமணத்தின் போது கொடுத்த வீட்டு உபயோக பொருட்கள் என் கணவர் வீட்டில் தான் உள்ளது. என்னுடைய பொருளாதார நிலை தெரிந்து தான் என் கணவர் என்னை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். என்னுடைய பொருளாதார நிலை மிகவும் குறைவானது தான். என்னுடைய அப்பா வெளிநாட்டிற்கு சென்று அங்கேயே தங்கி விட்டார் என்றால் சரியல்ல, திருமண செலவிற்கு வாங்கிய கடனிற்காக அங்கேயே காலம் கடந்து illegal லாக அங்கேயே தங்கிவிட்டார். அப்படி illegal லாக இருந்த என் அப்பாவை எதிர்மனுதாரர் தான் முறைப்படுத்தி இங்கு அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் பேசிய சமரசம் எங்களிடம் எழுதி கையெழுத்து பெறப்பட்டதா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. குழந்தையை பார்க்க என் கணவர் பலமுறை வந்தபோது எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவர் குழந்தையை பார்க்க வரவில்லை. குழந்தையை என் கணவர் வளர்த்துக்கொள்வதாக கேட்டால் கொடுக்க சம்மதமா என்றால் இல்லை. சராசரி கணவர் எதிர்பார்க்கும் விசயத்தை தான் என்னிடம் எதிர்மனுதாரர் எதிர்பார்த்தார் என்றும் அதை நான் பூர்த்தி செய்யவில்லை என்றும், நானாக பிரிந்து வாழ்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் தூண்டுதலின் பேரில் தான் நான் இப்படி நடந்து கொள்கிறேன் என்றால் சரியல்ல. என் திருமணசமயத்தில் எதிர்மனுதாரரின் சகோதரி அவருடைய கணவருடன் பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து வாழ்கிறார் என்றால் சரிதான். அவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. எதிர்மனுதாரரின் சகோதரி பெரம்பலூரில் வேலை பார்த்து வந்ததால் அவருடைய குழந்தையை எதிர்மனுதாரரின் தாயார் தான் வளர்த்து வந்தார் என்றால் சரிதான். அந்த குழந்தையை அங்கு வளர்ததால் எனக்கும் என் கணவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் அந்த குழந்தையை என் கணவரின் குழந்தை என்று அவதூறாக பேசினேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீடு கட்டிய பிறகு தான் எங்களுக்கு திருமணம் நடந்தது. எதிர்மனுதாரர் வங்கியில் லோன் வாங்கி தான் கட்டினார் என்றால் சரியல்ல, அவர் சம்பாரித்து தான் வீடு கட்டினார். எங்கள் வீட்டில் இருந்து எதிர்மனுதாரர் வீடு கட்டுவதற்காக பணம் கொடுத்தோமா என்றால் ரூ.1 லட்சம் கேட்டார்கள் ஆனால் ரூ.50000/- கொடுத்தோம். பணம் கொடுத்ததற்கு ஆதாரம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரரும் அவருடைய குடும்பத்தாரும் என்னிடம்

வரதட்சணை கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டார்கள். இந்த மனுவில் எதிர்மனுதாரர் மீது தனிப்பட்ட முறையில் புகார் கூறிதான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் தாயார் வரதட்சணை கேட்டதால் அதை எதிர்மனுதாரர் தட்டி கேட்காமல் ஆதரவு அளித்ததால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய பிரச்சனை என் மாமியார் தானா என்றால் என் கணவர் மற்றும் என் மாமியார். ஆனாலும் புகாரில் என் மாமனார் மற்றும் என் நாத்தனாரையும் சேர்த்து தான் புகார் கொடுத்தேனா என்றால் சரிதான். என்னுடைய பொருளாதார நிலை தெரிந்து தான் என்னை திருமணம் செய்தார்கள் ஆகையால் என்னிடம் வரதட்சணை கேட்கவில்லை என்றால் சரியல்ல. மனுவில் பத்தி 6 ல் நடக்காத விசயத்தை தான் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் திருமண சமயத்தில் எனக்கு செய்த நகைகள் என் வசம் உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் குடிப்பழக்கம் உள்ளவர் என்றும், குடித்து விட்டு என்னை அடித்து கொடுமை படுத்தினார் என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பெண் குழந்தை பிறந்ததால் அதை சுட்டிக்காட்டி என்னை கொடுமைப்படுதினார்கள் என்று நான் பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் தன்னிச்சையாக பிரிந்து வாழ்வதால் என்னை பராமரிக்க வேண்டிய அவசியம் எதிர்மனுதாரருக்கு இல்லை என்றால் சரியல்ல, நான் அவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன், என்னால் என்னுடைய குழந்தையை பராமரிக்க முடியவில்லையா என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் அவருடைய வருமானத்திற்கு உட்பட்டு அவருடைய குழந்தையை தானே வளர்த்து கொள்கிறேன் என்று என்னிடம் குழந்தையை கேட்டால் நான் கொடுக்க தயாராக இல்லை. நான் கர்பமாக இருந்த சமயத்தில் என்னை கொடுமைப்படுத்தினார்கள் என்று நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னையும் என் பெற்றோரையும் அடித்து காயப்படுதினார் என்று தவறாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அவரை வெளிநாடு செல்லவிடாமல் தடுத்தேன் என்றால் சரியல்ல. ஆகையால் என்னால் தான் அவருக்கு வேலை மற்றும் வருமான இழப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு தற்போது வேலை மற்றும் வருமானம் இல்லை என்றால் சரிதான், ஆனால் அதற்கு நான் காரணம் இல்லை. நான் என் கணவரை பல வகையில் கொடுமை படுத்தி

மனஉளச்சலுக்கு ஆளாக்கியதால் அவர் விவாகரத்து கேட்டு மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, வரதட்சணை கொடுக்காததால் தான் விவாகரத்து தாக்கல் செய்தார். இந்த மனுவில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இருவருக்கு இடையில் கருத்து வேறுபாடு உள்ள சூழலில் நாங்கள் ஒன்றாக வாழ வாய்ப்பு இல்லையா என்றால் அவர் நினைத்தால் ஒன்றாக வாழலாம். நான் சேர்ந்து வாழ நினைக்கவில்லை அதனால்தான் எதிர்மனுதாரர் மீது குற்ற புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை